**திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது)**
**செயல்முறைகள்**
**ஆணையிடுபவர் : திரு.ப.செல்வம்.B.Sc.,DCP&IC.,MBA.,**

COLREV-COLR/58753/2023-A3 நாள்:13-05-2024

| | | |
|---|---|---|
| பொருள்: | பொதுப்பணி – தமிழ்நாடு அமைச்சுப்பணித்தொகுதி – திருப்பத்தூர் மாவட்ட வருவாய் அலகு – தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் – ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு தொகுதி – IV (தேர்வு நாள்– 24.07.2022) **– இளநிலை வருவாய் ஆய்வாளராக** தெரிவு செய்யப்பட்டு திருப்பத்தூர் மாவட்ட வருவாய் அலகில் பணிபுரிந்து வரும் **திரு.அ.கிரி மற்றும் திருமதி.கு.பவுனாயாள்** ஆகியோருக்கு – பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது. | |
| படிக்க : | 01. | தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளர் அவர்களின் கடித எண் 1832/PSD-D1/2023, நாள். 22.08.2023. |
| | 02. | திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) செயல்முறை ஆணை COLREV-COLR/58753/2023-A3 நாள்:19.09.2023. |

******

**ஆணை:**

பார்வை-1இல் கண்டுள்ள கடிதப்படி தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்திய ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு தொகுதி-IV (தேர்வு நாள்:24.07.2022) அன்று நடைபெற்ற தேர்வு மூலம் இளநிலை வருவாய் ஆய்வாளராக தெரிவு செய்யப்பட்டு, திருப்பத்தூர் மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை -2இல் கண்டுள்ளவாறு இம்மாவட்ட வருவாய் அலகில் பணிநியமனம் வழங்கப்பட்டு வாணியம்பாடி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் **திரு.எ.கிரி மற்றும்** திருப்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் **திருமதி.கு.பவுனாயாள்** ஆகிய இரண்டு நபர்களும் அவர்கள் பணியில் சேர்ந்த நாளான **27.09.2023 பிப** முதல் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை வருவாய் ஆய்வாளர் பணியமைப்பில் வரன்முறை செய்தும், பணிவரன்முறை செய்த நாள் முதல் தகுதிகாண்பருவம் துவக்கியும், இவர்களது தகுதிகாண்பருவம் மூன்று ஆண்டு காலம் தொடர்ந்து பணியாற்றுதலுக்குட்பட்டு இரண்டு ஆண்டு காலம் தகுதிகாண்பருவமாக

நிர்ணயம் செய்தும் ஆணையிடப்படுகிறது.

2 ) இந்த பணிவரன்முறையானது நீதிப்பேராணை மனுக்கள் சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற மதுரை கிளை ஆகியவற்றில் நிலுவையில் உள்ள வழக்குகளின் இறுதி தீர்ப்புரைகளுக்கு உட்பட்டது.

3 ) மேற்படி ஆணை குறித்து தனியர்களின் பணிப்பதிவேட்டில் தக்க பதிவுகள் மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்கள் கோரப்படுகிறார்கள்.

Signed by
Selvam P
Date: 13-05-2024 10:38:36

P SELVAM
மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (பொது),
திருப்பத்தூர் மாவட்டம்.

பெறுநர்.

சம்பந்தப்பட்ட நபர்கள்.

நகல்:வருவாய் கோட்டாட்சியர், வாணியம்பாடி.
நகல்:வட்டாட்சியர், திருப்பத்தூர்.
நகல்: அ3–இருக்கைக்கு.